**2 திருக்குறள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

**(i)** மேற்கூறிய குறள்களில் செல்லான் கிழவன், இல்லாள், நல்லாள் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

**(ii)** உலகின் அனைத்துத் தொழில்களிலும் உழவுத்தொழிலே சிறந்தது என்பதை உழவு அதிகாரத்தில் எவ்வாறெல்லாம் விளக்குகிறார் குறளாசான்? [25]

**அல்லது**

**(b)** உயிர்களைக் கொல்லுதலாகிய மிகக்கொடிய பாவத்தைச் செய்யாமலிருக்க கொல்லாமை அதிகாரம் தரும் விளக்கம் என்ன? [25]

© UCLES 2023

**பகுதி 2**

**4 இக்கால கவிதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a) பாரதியார்**
ஒரு ஆங்கிலக் கவிதையின் கற்பனையூர் என்ற பாடலில் பாரதியார் கையாண்டிருக்கும் எளிய நடையை விளக்கவும்? [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**
'சும்மாகிடந்த நிலத்தைக் கொத்தி' என்று தொடங்கும் பாடலில் விவசாயியின் உழைப்பு, பொறுமை போன்ற சிறப்பு குணநலன்களை கவிஞர் எவ்வாறு விளக்குகிறார்? [25]

**5 நாவல், அந்த நாள் - டாக்டர் மு வரதராசனார்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** பர்மாவிலிருந்து தாய்நாடு திரும்ப எண்ணிய தமிழர்கள் அனுபவித்த துன்பங்களை "அந்த நாள்" நாவல் எவ்வாறெல்லாம் விளக்குகிறது? [25]

**அல்லது**

**(b)** பயன் கருதாது நாட்டுக்கு பணிபுரியும் பண்பையும் நாட்டுப்பற்றையும் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டது தான் இந்த நாவல் என்பதை ஏற்கிறீர்களா? [25]

**6 தமிழ் சிறுகதைகள்**

**பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.**

**(a)** தனது கர்ஜனையாலும், உடல் மொழியாலும் ஒரு நிஜப்புலியையே காட்டிய அந்த கலைஞனுக்கு திரைப்படத்தில் வாய்ப்பு எப்படி அமைந்தது? [25]

**அல்லது**

**(b)** குருபீடம் கதையில் உண்மையில் சிஷ்யன் குருவைத்தேடி வந்தானா அல்லது குரு சிஷ்யனைத்தேடி வந்தாரா, உங்கள் கருத்து என்ன? [25]

